பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 07 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜர் ஆற்றிய பணி ஈடு இணையற்றது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

- உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

- காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை அளிக்க கர்நாடகா அரசு மறுத்திருப்பது கண்டனத்திற்குரியது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- நீட் தேர்வு விவகாரத்தில் அரசியல் செய்வது ஏற்புடையது அல்ல என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

- உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat singh மற்றும் Shaurya bawa காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*--இனி விரிவான செய்திகள்----*

<<<<<<<>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜர் ஆற்றிய பணி ஈடு இணையற்றது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

காமராஜரின் பிறந்த தினத்தையொட்டி, சமூக வலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காமராஜரின் தொலைநோக்கு தலைமை மற்றும் ஏழைகளின் வளர்ச்சிக்காக ஆற்றிய பங்களிப்பு போற்றுதலுக்குரியது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

காமராஜரின் லட்சியங்களை நிறைவேற்றுவதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

உலகத்தரம் வாய்ந்த உயர்கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

ஜம்முவில் உள்ள இந்திய மேலாண்மை கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று கலந்துகொண்டு அவர் பேசினார்.

புத்தொழில் நிறுவனங்களை தொடங்க, தொடர்ந்து ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்கள் தங்களது தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு இன்றியமையாதது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை அளிக்க கர்நாடகா அரசு மறுத்திருப்பது கண்டனத்திற்குரியது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக விவசாயிகளின் நலனை பாதிக்கக்கூடிய இத்தகைய செயல்களை மாநில அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று கூறியுள்ளார்.

காவிரியில் தமிழகத்துக்குரிய நீரை பெறுவது குறித்து விவாதிப்பதற்காக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தலைமையில் நாளை சட்டமன்ற அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெறும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் சட்ட வல்லுநர்களையும் கலந்தாலோசித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, காவிரி பிரச்சினை தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு முதலமைச்சர்தான் தலைமை ஏற்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதலமைச்சர் தலைமையில் அனைத்துக்கட்சிக்கூட்டம் நடைபெற்றால்தான் இந்த விவகாரத்தில் தமிழக அரசு எவ்வளவு உறுதியாக இருக்கிறது என்பதை எடுத்துரைக்க இயலும் என்று கூறியுள்ளார்.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி, தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை வழங்காத கர்நாடக அரசின் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுக்கு உட்பட்டு, கர்நாடக அரசு செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனை கர்நாடகா செயல்படுத்தாத பட்சத்தில், மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு செல்வப்பெருந்தகை கேட்டுக்கொண்டார்.

காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசின் எதிர்மறை அணுகுமுறை மாநில உறவுகளுக்கு வலுசேர்க்காது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு மாறாக கர்நாடக அரசு தொடர்ந்து செயல்படுவது எதிர்விளைவுகளை உருவாக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பினை மதித்து, தமிழகத்திற்குரிய நீரினை கர்நாடக அரசு முழுமையாக வழங்க வேண்டும் என்றும் திரு முத்தரசன் கோரியுள்ளார்.

<<<<<<<>>>>>

நீட் தேர்வு விவகாரத்தில் அரசியல் செய்வது ஏற்புடையது அல்ல என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நீட் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் அரசுப்பள்ளி மாணவர்கள் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர் என்பது குறித்த வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நீட் தேர்வு வருவதற்குமுன் அரசுப்பள்ளி மாணவர்கள் எத்தனை பேர் பயனடைந்தார்கள் என்பது குறித்த விவரங்கள் இதில் இடம்பெற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத்தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை சிபிஐ-க்கு மாற்ற வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இதுதொடர்பாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-விற்கு தாம் எழுதிய கடிதத்தின் அடிப்படையில், தமிழக அரசிடம் உள்துறை அமைச்சகம் விளக்கம் கேட்டுள்ளதாகவும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாத பாதிப்புகளை கண்டறிவதற்கான பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் “பாதம் பாதுகாப்போம்” திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 10 சதவீதம் பேருக்கு பாத பாதிப்புகள் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதனை தடுக்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

மாநிலம் முழுவதும் 15 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் பாத அறுவைசிகிச்சை சேவை வழங்கப்பட உள்ளதாகவும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் பொறியியல் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 22-ஆம் தேதி தொடங்கவுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - பொன்முடி – 34 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்குள் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 63 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி மாவட்டம் வெளிச்சந்தை ஊராட்சிக்கு உட்பட்ட வெள்ளமோடி பகுதியில் சாலைப் பணிகளை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

அஞ்சல் துறை சார்பில் வட்ட அளவிலான ஓய்வூதியதாரர்கள் குறைதீர் முகாம் வரும் 20-ஆம் தேதி சென்னையில் உள்ள முதன்மை அஞ்சல்துறை அலுவலகத்திலிருந்து காணொலி வாயிலாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் முழுநேர பட்டய படிப்பிற்கான மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருவதாக மண்டல இணைப்பதிவாளர் திரு ராஜேந்திர பிரசாத் தெரிவித்துள்ளார்.

--------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று வழங்கினார்.

-------

நாகை மாவட்டத்தில் தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் புதுப்பிக்கப்பட்ட சிலையை ஆட்சியர் திரு ஜானி டாம் வர்கிஸ் இன்று திறந்துவைத்தார்.

-------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் ஊட்டச்சத்து கரைசல் தெளித்தல் மூலம் கூடுதல் மகசூலை பெற முடியும் என்றும், இதுதொடர்பான கூடுதல் விவரங்களை வட்டார வேளாண் விரிவாக மையத்தை அணுகி பெறுமாறும் வேளாண்துறை இணை இயக்குனர் திரு ரவிச்சந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat singh மற்றும் Shaurya bawa காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், Shaurya Bawa 11-9, 5-11, 11-5, 13-11 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் Segundo Portabales –ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், Anahat singh 11-6, 13-11, 11-2 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Akari Midorikawa –வை வென்றார்.

--------

பாரிஸ் ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

<<<<<<<END>>>>>